தலைப்பு 233 - அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 233 – அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 ஆம் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஆகஸ்ட் 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அரசாங்க இரசாயணப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை அரசாங்கத்தின் இரசாயணப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைப்பாடுகள்

(அ) வருமானம் அல்லாத பெறுவனவு

நிதிக்கூற்றுகளுக்குரிய வருமானம் அல்லாத பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது, கீழே காட்டப்பட்டுள்ள குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(i)	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் பௌதீகச் சொத்துக்களை விற்றதன் பெறுமதியாக ரூபா.249,556 காசுப் பாய்ச்சல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும், உண்மையில் சொத்துக்கள் விற்பனையால் பெறப்பட்ட தொகை ரூபா.57,029 ஆகும். அதன்படி, காசுப் பாய்ச்சல் அறிக்கையில் பௌதீகச் சொத்துக்களை விற்றதன் மூலம் கிடைத்த பணமாக ரூபா.192,527 கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளது.	திணைக்களத்தின் நிலையான சொத்துக்களை விற்றதன் மூலம் உண்மையில் பெறப்பட்ட வருமானம் ரூபா.57,029 என்றும், வீட்டு வாடகை வருமானம் ரூபா.249,556 என்றும், அந்த வருமானங்கள் இடமாற்றப்பட்டு இறுதி கணக்குகளில் பதியப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. .	சரியான பெறுமதிகள் நிதிநிலை அறிக்கைகளில் சேர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்
(ii)	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், வருமானம் அல்லாத வரவுகள் ரூபா.50,030,954 ஆக காசுப் பாய்ச்சல் அறிக்கையில் சேர்க்கப்பட்டிருந்தபோதிலும், திணைக்களத்தின் பரீட்சை நிலுவையின்படி (Trial Balance) வருமானம் அல்லாத வரவுகள் ரூபா.50,223,481 ஆக இருந்தது. அதன்படி, பாய்ச்சல்	திணைக்களத்தின் நிலையான சொத்துக்களை விற்றதன் மூலம் உண்மையில் பெறப்பட்ட வருமானம் ரூபா.57,029 என்றும், வீட்டு வாடகை வருமானம் ரூபா.249,556 என்றும், அந்த வருமானங்கள் இடமாற்றப்பட்டு இறுதி கணக்குகளில் பதியப்பட்டுள்ளதாகவும்	சரியான பெறுமதிகளை நிதிநிலை அறிக்கைகளில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

அறிக்கையில் வருமானம் அல்லாத வரவுகள் ரூபா.192,527 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.	அறிவிக்கப்பட்டிருந்தது..

(ஆ) மீண்டெழும் செலவினங்கள்

நிதிக்கூற்றுகளுக்குரிய மீண்டெழும் செலவினங்களை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டது.

கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் செயற்பாட்டு செலவினங்கள் ரூபா.560,878,233 ஆக காசுப் பாய்ச்சல் அறிக்கையில் சேர்க்கப்பட்டிருந்தபோதிலும், திணைக்களத்தின் பரீட்சை நிலுவையின்படி (Trial Balance) ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் செயற்பாட்டு செலவினங்கள் ரூபா.564,995,925 ஆக இருந்தது. அதன்படி, காசுப் பாய்ச்சல் அறிக்கையில் ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் செயற்பாட்டு செலவினங்கள் ரூபா.4,117,692 குறைவாக காட்டப்பட்டிருந்தது.	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் செயற்பாட்டு செலவுகளில் சேர்க்கப்பட வேண்டிய ரூபா.4,117,692 பெறுமதியானது, முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் இறுதி கணக்குகளில் பதியப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	சரியான பெறுமதிகளை நிதிநிலை அறிக்கைகளில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(இ) மூலதனச் செலவினங்கள்

நிதிக்கூற்றுகளுக்குரிய மூலதனச் செலவினங்களை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டது.

கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், சொத்துக்களைப் கைப்பற்று-வதற்காக செய்யப்பட்ட செலவினங்கள் ரூபா.106,965,279 ஆக காசுப் பாய்ச்சல் அறிக்கையில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தபோதிலும், திணைக்களத்தின் பரீட்சை நிலுவையின்படி (Trial Balance) அந்தப் பெறுமதி ரூபா.102,847,587 ஆக இருந்தது. அதன்படி, காசுப் பாய்ச்சல் அறிக்கையில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் நிலையான சொத்துக்களை கொள்வனவு	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் செயற்பாட்டு செலவுகளில் உள்ளடக்கப்பட வேண்டிய ரூபா.4,117,692 பெறுமதியானது, முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் இறுதி கணக்குகளில் பதியப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	சரியான பெறுமதிகளை நிதிநிலை அறிக்கைகளில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

செய்வதற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா.4,117,692 கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) அரச உத்தியோகத்தர்களுக்கான முன்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
திணைக்களத்தின் புத்தகங்களின் படி, அரசாங்க உத்தியோகத்தர்களின் முன்பணக் கணக்கின் ஆரம்ப இருப்பு ரூபா.19,545,764 ஆக இருந்தது, ஆனால் அந்த இருப்பு திறைசேரியின் அச்சிடப்பட்ட குறிப்புகளின்படி (SA **52)** ரூபா.19,566,424 ஆகும். அதன்படி, ஆரம்ப இருப்புகளுக்கு இடையிலான ரூபா.20,660 வேறுபாடு ஆண்டின் முடிவிலும் காணப்பட்டது.	இந்த வேறுபாடு 1996 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்து முன்னோக்கிக் கொண்டு வரப்பட்ட இருப்பாகும். இந்த வித்தியாசத்தைக் கண்டறிந்து சரிசெய்யுமாறு அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகம் (Director General of State Accounts) அறிவித்துள்ளார். இருப்பினும், அந்தக் காலப்பகுதிக்குரிய திறைசேரி கணினி அச்சீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தாலும், அந்தக் காலப்பகுதிக்குரிய புத்தகங்களை (Books of Accounts) கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.	சரியான பெறுமதிகளை நிதிநிலை அறிக்கைகளில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(உ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றைக் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரைகள்**
(i)	திணைக்களத்தின் நிதி அல்லாத சொத்துக்களின் (ACA – 6 படிவம்) 2023 திசெம்பர் 31ஆம் திகதியிட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள நான்கு இறுதி இருப்புகளுக்கும், 2024 சனவரி 01ஆம் திகதியிட்ட அதே சொத்துக் குழுக்களின் ஆரம்ப இருப்புகளுக்கும் இடையில் ரூபா.466,900,603 வித்தியாசம் காணப்பட்டது.	ஆண்டின் போது திணைக்களத்திடம் கையளிக்கப்பட்ட 4 வாகனங்களின் பெறுமதியான ரூபா.21,700,000, திட்டத்தின் கீழ் பெறப்பட்ட ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியான ரூபா.42,836,328, மற்றும் ரூபா.402,364,275 பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் திறைசேரி செயல்பாட்டுத் திணைக்களத்திடம் கணக்கிடப்பட்டிருந்தாலும், அந்தப் பெறுமதிகள் வருட ஆரம்ப இருப்பில் சேர்க்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அவ்வாறு சில கொடுக்கல்	சரியான பெறுமதிகளை நிதிநிலை அறிக்கைகளில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

		வாங்கல்களை CIGAS முறைமை பெறும் விதம் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.	
(ii)	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ACA -2 (ii) இல் மூலதனச் சொத்துக்களைப் பெற்றுக்-கொள்வதற்காக செய்யப்பட்ட செலவு ரூபா.529,019,190 ஆகும், மேலும் ACA 6 படிவத்தின்படி ஆண்டின் போது சொத்துக்களின் கொள்வனவுக்காக செய்யப்பட்ட செலவு ரூபா.83,818,587 ஆகும். அதன்படி, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் சொத்துக்களைப் பெற்றுக்-கொள்வதற்காக செய்யப்பட்ட செலவில் ரூபா.445,200,603 வித்தியாசம் காணப்பட்டது.	2024 ஆம் ஆண்டில் பெறப்பட்ட சொத்துக்களில், ரூபா.466,900,603 பெறுமதியான சொத்துக்கள் கணினி முறைமையால் ஆரம்ப இருப்பில் இணைக்கப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், திணைக்களத்தால் பெறப்பட்ட ரூபா.83,818,587 மட்டுமே ஆண்டின் போது ஏற்பட்ட சேர்க்கைகளாக ACA-6 படிவத்தில் பதியப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	சரியான பெறுமதிகளை நிதிநிலை அறிக்கைகளில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(iii)	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அகற்றப்பட்ட நிலையான சொத்துக்களின் செலவு, சொத்துக்களின் பெறுமதியில் இருந்து அகற்றப்படாமையால், நிதி அல்லாத சொத்துக்கள் பற்றிய கூற்றில், ஆண்டின் இறுதியிலான ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்களின் இருப்பு தொகையிலும், ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்களின் ஒதுக்கீட்டு நிதியிலும் சரியான பெறுமதி காண்பிக்கப்படவில்லை.	களஞ்சியப் பிரிவில் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக, பொருட்களை அகற்றும் நடவடிக்கைகள் சிறிது கால தாமதத்துடன் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு அகற்றப்பட்ட நிதி அல்லாத சொத்துக்களின் இருப்பை சொத்துப் பதிவேடுகளில் இருந்து நீக்கும் நடவடிக்கைகள் 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.	சரியான பெறுமதிகளை நிதிநிலை அறிக்கைகளில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஊ) கட்டுநிதி மீதிகள்

கட்டுநிதி மீதிகளை கணக்கீடு செசய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டது.

கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
திணைக்களத்தினால் செலவுத் தலைப்பு 253 (253-1-2-4-1502-12) இற்காகச் செலவிடப்பட்ட ரூபா. 190,730 ஆனது, முதற்கட்ட இணக்கப்பாட்டு அறிக்கையில் (ACA-7) ஏனைய தலைப்புகளுக்காக அறிக்கை-ப்படுத்தும் நிறுவனத்தினால் செலவிடப்பட்ட செலவினங்களில் உள்ளடக்கப்படவில்லை.	ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரின் தீர்க்கப்பட்ட முற்பணம் “பி” கணக்கின் மீதித் தொகையான ரூபா. 190,730 ஆனது, பணப்பாய்ச்சல் அறிக்கையின் ஏனைய செலவுத் தலைப்புகளுக்காகச் செலவிடப்பட்ட ரூபா. 15,500,691 பெறுமதியில் உள்ளடங்கியுள்ளதால், முதற்கட்ட இணக்கப்பாட்டு அறிக்கையில் காண்பிப்பது அவசியமில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது.	சரியான பெறுமதிகளை நிதிநிலை அறிக்கைகளில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(எ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

திணைக்களத்தினால் பினவரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(i) பிணைகள் பதிவேடு		
நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைவைப்பு கட்டளைச் சட்டம் திருத்துவதற்காக முன்வைக்கப்ப-ட்டுள்ளதால், எதிர்காலத்தில் அந்த சட்டத்திற்கிணங்க செயற்படத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடங்கும் விதத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைகள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும்.
(ii) நட்டங்கள் தொடர்பான பதிவேடு		
நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில் லை.	நிதி பிரமாணம் **110** இற்கு அமைவாகவும், வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவா-கவும் நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான பதிவேட்டினை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது	நிதிப்பிரமாணம் **110** இன் ஏற்பாடுகளுக்கமைய அதன் கீழான மாதிரிக்கமைய நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட வேண்டும்.
(iii) வாகன சம்பவக்குறிப்பு புத்தகம்(Log Book)		
நிதிப்பிரமாணம் 1645(அ) இற்கமைய வாகன சம்பவக்குறிப்பு புத்தகமொன்று பேணப்பட்டிருக்கவில்லை.	**இ**து தொடர்பாக வாகனப் பொறுப்பு விடய உத்தியோகத்தர்களிடம் ஆலோசனை வழங்கப்பட்ட போதிலும், வேலைப்பளு காரணமாக இதுவரை உரியவாறு வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்கள் இற்றைப்படுத்தப்படவில்லை என்பதுடன், 2025 மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து சம்பவக் குறிப்பு புத்தகங்களும் முறையாக இற்றைப்படுத்தப்பட்டு, தேசிய கணக்காய்வு அலுவலகத்திடம் சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	நிதிப்பிரமாணம் 1645(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய பொது 267 எனும் படிவத்தின் பிரகாரம் வாகன சம்பவக்குறிப்பு புத்தகங்கள் ஒவ்வொரு வாகனம் தொடர்பிலும் பேணப்பட வேண்டும்.

(iv) குழுக் கூட்ட அறிக்கைகள்

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.3 (அ) ஆம் வழிகாட்டிக்கமைய பெறுகைகள் குழுக்களின் கூட்ட அறிக்கைகள் பேணப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் கொள்முதல் கையேட்டின் **2.11.3** மற்றும் கொள்முதல் வழிகாட்டித் தொகுப்பின் **2.11.3(அ)** ஆகியவற்றின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை உரிய படிவத்தின் மூலம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது	அரசாங்கக் கொள்முதல் வழிகாட்டித் தொகுப்பின் 2.11.3(அ) வழிகாட்டலின் பிரகாரம் கொள்முதல் கையேட்டின் 2.11.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு இணங்க அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன.

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில், 13 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா. 223,724,435 நிதியொதுக்கங்களில் மீதமிருந்தன. அவ்வாறு செலவு விடயங்களில் மீதமுள்ள சதவீதமானது 10 சதவீதம் 57 சதவீதம் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.	பிரதானமாக, கொள்வனவுப் பணிகளை மேற்கொள்ளும் போது விலைகள் குறைவடைதல், போட்டித்தன்மை வாய்ந்த கேள்வி கோரல், வெளிநாட்டு நாணய மாற்று வீதம் குறைந்த பெறுமதியை எடுத்தமை, உத்தியோகத்தர் வெற்றிடங்கள் காணப்பட்டமை மற்றும் சுங்க வரிகள் தொடர்பான முன்னறிவிப்பை மேற்கொள்ள முடியாமை போன்ற காரணங்களால். நிதியொதுக்கங்கள் தொடர்பான மீதங்கள் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	தேவையினை உரியவாறு இனங்கண்டு திட்டங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஆ)	நிதி பிரமாணம் 50 இற்கு அமைவாக, நிதியாண்டுக்குள் தமது திணைக்களத்தினால் நிறைவேற்றக்கூடிய ஆற்றலினுள், நியாயமான முறையில் முன்னுணரக்கூடிய சகல சேவைகளும் மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டு, மதிப்பீடுகளை இயன்றளவு சரியாகத் தயாரிக்காமையினால், திணைக்களத்தின் மொத்த நிகர நிதியொதுக்கத்திற்கும் மதிப்பிடப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் இடையிலான வேறுபாடானது மதிப்பிடப்பட்ட நிதியொதுக்கத்தின் சதவீதத்தின்படி 44 சதவீதம் 140 சதவீதம் இடையிலான வீச்சில் காணப்பட்டது.	கோரப்பட்ட முழுமையான நிதியொதுக்கத் தொகையையும் வழங்காமை, நாணய மாற்று வீத மாற்றங்கள் மற்றும் மூலப்பொருட்களின் விலை வீழ்ச்சி போன்ற காரணங்களால் மதிப்பிடப்பட்ட பணம் செலவிடப்படாமை மற்றும் அத்தியாவசியமான ஆய்வுகூட உபகரணங்கள் சிலவற்றை கொள்வனவு செய்வதற்காக நிதியொதுக்கங்களை மாற்றியமைத்தமை காரணமாக ஆரம்ப மதிப்பீடு உண்மையான மதிப்பீட்டிலிருந்து வேறுபட்டது. மதிப்பீடுகளைத் தயாரிக்கும்போது உண்மையாகவே மதிப்பிட முடியாத விடயங்கள் மற்றும் ஆண்டு முழுவதும் நிர்வாக கொடுப்பன-வுகள், வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு அதிகரித்தமையால் சில செலவு விடயங்களுக்காகப் பூரணைப்படுத்தும் நிதியொதுக்கங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தமையாலும் ஆரம்ப மதிப்பீட்டு நிதியொதுக்கங்களுக்கும் மொத்த நிகர மதிப்பீட்டு நிதியொதுக்கங்களுக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	உண்மையான மதிப்பீடுகளைத் தயாரித்தல் வேண்டும்.
(இ)	நிதி பிரமாணம் 50 இற்கு அமைவாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் வரவுசெலவு மதிப்பீடுகளை இயன்றளவு பூரணமாகவும் சரியாகவும் தயாரித்து, வழங்கப்பட்டுள்ள நிதியொதுக்கங்களின் எல்லைகளுக்குள்ளேயே செலவினங்களைக் முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் 16 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட நிதியொதுக்கங்களுக்கு மேலதிகமாக, நிதி பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய நோக்கங்-களுக்காக ரூபா.115,036,000 நிதியொதுக்கங்கள் மாற்றியமைக்கப்பட்டிருந்தன. மேலும் 4 செலவு விடயங்களுக்காக ரூபா. 108,835,000 குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் பெறப்பட்டி-	கோரப்பட்ட முழுமையான நிதியொதுக்கத் தொகையையும் திறைசேரியினால் வழங்காமை, திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நாணய மாற்று வீத மாற்றங்கள், மூலப்பொருட்களின் விலை வீழ்ச்சி போன்ற காரணங்களால் மதிப்பிடப்பட்ட செலவுகள் இடம்பெறாமை மற்றும் அத்தியாவசியமான ஆய்வுகூட உபகரணங்கள் சிலவற்றை கொள்வனவு செய்வதற்காக நிதியொதுக்கங்களை மாற்றியமைத்-தமை போன்ற காரணங்களால் ஆரம்ப மதிப்பீடு, மதிப்பீட்டிலிருந்து வேறுபடுகிறது மேலும், மதிப்பீடுகளைத் தயாரிக்கும்போது உண்மையாகவே மதிப்பிட முடியாத விடயங்கள் மற்றும் ஆண்டு முழுவதும் நிறைவேற்று கொடுப்பனவுகள், வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு அதிகரித்தமையால் சில செலவு விடயங்களுக்காக நிதி நியதிச்	உண்மையான மதிப்பீடுகளைத் தயாரித்தல் வேண்டும்.

	ருந்தன. செலவு விடயங்களுக்கிடையில் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட சதவீதம் 5 சதவீதம் 140 சதவீதம் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.	சட்டம் **66** மற்றும் நிரப்பு நிதியொதுக்கங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றேன்.	
(ஈ)	மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் 5 செலவு விடயங்களுக்காக நிதி பிரமாணம் 66 மூலம் ரூபா. 10,500,000 மாற்றியமைக்கப்பட்டிருந்தது, அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட நிதியொதுக்கங்களில் ரூபா. 2,634,639/- அதாவது 11 சதவீதம் 60 சதவீதம் வரை உபயோகிக்கப்படாமல் மீதமிருந்தன.	உரிய பற்றுச்சீட்டுக்கள் கட்டுநிதி பெறுவதற்குப் போதுமான காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்கப்படாமை, அவசர தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பெறப்பட்ட நிதியொதுக்கங்களில் மீதமிருந்தமை மற்றும் சுங்க வரிகள் தொடர்பான முன்னறிவிப்பை மேற்கொள்ள முடியாமை போன்ற காரணங்களினால் இப் பணம் மீதமிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது.	மதிப்பீடுகளை தயாரிக்கும்போது நிதி பிரமணாம் பிரகாரம் செயற்படுதல் வேண்டும்.
(உ)	மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் 233-1-1-1-2103(17) ஆம் இலக்க செலவுத் தலைப்பின் கீழ் இயந்திரங்கள் மற்றும் இயந்திர சாதனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக குறைநிரப்பு மதிப்பீடு மூலம் பெறப்பட்ட ரூபா. 70,000,000 நிதியொதுக்கத்திலிருந்து ரூபா. 15,292,908 அதாவது 22 சதவீதம் உபயோகிக்-கப்படாமல் மீதமிருந்தது.	KOICA திட்டத்தின் கீழ் பெறப்பட்ட ஆய்வுகூட தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள், ஆய்வுகூட இயந்திரங்கள் மற்றும் இயந்திர சாதனங்கள் தொடர்பான உள்ளூர் கட்டணங்களை இலங்கைச் சுங்கத் திணைக்களம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஆகியவற்றுக்குச் செலுத்துவதற்காக இந்த நிதியொதுக்கங்கள் பெறப்பட்டன. அந்தத் திணைக்களங்களுக்கான கட்டணங்களை முன்னறிவிக்க முடியாமை காரணமாக இந்த நிதியொதுக்கங்கள் மீதமிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது.	மதிப்பீடுகளை முறையாகத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் நிதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள பொறுப்புகள் பற்றிய கூற்றில் (i) பொறுப்புகளாக ரூபா. 3,396,209 குறிப்பிடப்பட்டி-ருந்தபோதிலும், நிறுவனத்தின் பொறுப்புகள் பதிவேட்டில் அப் பெறுமதி ரூபா. 3,506,872 ஆக இருந்தது. அதன்படி, பொறுப்புகள் பற்றிய கூற்றில் (i) ரூபா. 110,663 குறைவான பொறுப்புகள் காண்பிக்கப்பட்டிருந்தன.	**2024** ஆம் ஆண்டுக்குரிய பொறுப்புகள் பதிவேடு தயாரிக்கப்பட்டு கணக்காய்விடம் சமர்ப்பிக்கும்போது, இந்தக் கொடுப்பனவுகளுக்குரிய வவுச்சர்கள் கணக்குகள் பிரிவுக்குக் கிடைக்கப்பெறவில்லை. அதன்படி மார்ச் மாதத்தில் கிடைக்கப்பெற்ற இரண்டு வவுச்சர்கள் பொறுப்புகள் பதிவேட்டில் உள்ளடக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது.	அனைத்து பொறுப்புகளும் பதிவேட்டில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

(ஆ)	255/2017 ஆம் இலக்க அரசிறைக் கணக்குகள் சுற்றுநிருபத்தின் 03 ஆம; பந்தியின் பிரகாரம், பிணைப்புக்கள், கடப்பாடுகள் மற்றும் கடப்பாடுகளைத் தீர்க்கும் செயல்முறை ஆகியவற்றை உள்ளடக்கி இற்றைப்படுத்தப்பட்டுள்ள சி.ஜி.ஏ.எஸ். (CIGAS) கணக்கியல் முறைமையில் பிணைப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமான செயல்முறையின் அனைத்துப் படிமுறைகளும் உள்ளடக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் நிதியியல் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள கடப்பாடுகள் பற்றிய கூற்றில் (ை) உள்ள ரூபா. 3,396,209 கடப்பாடுகள், திறைசேரி அச்சிட்ட குறிப்பில் (SA 92) உள்ளடக்கப்படவில்லை. அதன்படி திறைசேரி அச்சிட்ட குறிப்புக்கும் கடப்பாடுகள் கூற்றுக்கும் இடையில் ரூபா. 3,396,209 வேறுபாடு காணப்பட்டது.	CIGAS கணினி முறைமையில் பொறுப்புகளை உள்ளீடு செய்யும்போது, வருடாந்த நிதியொதுக்கங்களை விஞ்சி பொறுப்புகளை உள்ளீடு செய்ய முடியாது என்பதுடன், அதற்கிணங்க திணைக்களத்தின் நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்காக நிதி பிரமணாக் குறிப்பு 94(2) இன் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்புகளில் ஈடுபட நேரிட்டது. அதன்படி, திறைசேரி கணினி அச்சிட்ட குறிப்பில் உள்ளிடப்பட்ட பொறுப்புகளும், பொறுப்புகள் பற்றிய கூற்றில் (i) உண்மையில் உள்ள பொறுப்புகளுக்கு இடையில் இந்த வேறுபாடு காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	அரசிறைக் கணக்குகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் பொறுப்புகள் தொடர்பாக செயற்படுதல் வேண்டும்.
(இ)	மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் கூற்றிலும் திறைசேரி அச்சிட்ட குறிப்பிலும் (SA 92) உள்ளடக்கப்படாத ரூபா. 7,264,125 ஆன பொறுப்புகள் 2025 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டிருந்தன.	திறைசேரி அச்சிட்ட குறிப்புகளில் உள்ளடக்கப்படுவதற்குரிய பொறுப்புகள், CIGAS முறைமையில் கணக்கிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால், 2024 ஆம் ஆண்டிற்கு மீதமிருந்த நிதியொதுக்கங்கள் அவ்வாறு பொறுப்புகளைக் கணக்கிடுவதற்குப் போதுமானதாக இருக்கவில்லை. அதனால் CIGAS முறைமையில் கணக்கிடப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது	ஆண்டுக்கு ஏற்புடையதான அனைத்து பொறுப்புகளை கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(i)	திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும்/ கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்து, அதன் பிரகாரம் முறைமையை செயற்தினாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் பதவி வெற்றிடமாக உள்ளதாலும், உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்புடைய அமைச்சின் உள்ளக கணக்காய்வுத் திட்டத்தின் மூலம் ஈடுசெய்யப்படுகிறது எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ii)	உள்ளகக் கணக்காய்வு செயற்பாடு முறையாக செயற்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான நடைமுறையொன்று காணப்படுவதாக பிரதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அறிக்கையின் அறிக்கையின் **6.2** ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் அத் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் பதவி வெற்றிடமாக உள்ளதாலும், உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்புடைய அமைச்சின் உள்ளக கணக்காய்வுத் திட்டத்தின் மூலம் ஈடுசெய்யப்படுகிறது எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

	அவதானிப்புக்கள்		கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	**இணங்காமை**		
(அ)	**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை**			
	XV ஆம் அத்தியாயத்தின் 10.3 ஆம் பிரிவு	சம்பளத்துடனான வெளிநாட்டு விடுமுறையை வழங்கு-வதற்காக, நாட்டை விட்டு வெளியேறுவதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவம், அதிகபட்சம் உத்தியோகத்தர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு 10 நாட்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இருந்தும், 2024 செப்தெம்பர் 20 ஆம் திகதி முதல் 2025 செப்தெம்பர் 16 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு பட்டப்பின் படிப்பதை கற்பதற்காக சம்பளத்துடன் விடுமுறை பெற்ற சிரேஷ்ட உதவி பகுப்பாய்வாளர் பரிசோதகர் ஒருவருக்கு, மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் உரிய விடுமுறையை அங்கீகரிக்க முடியவில்லை.	திணைக்களத்தின் விடயப்பொறுப்பு உத்தியோகத்தரின் தாமதம் குறித்து எச்சரிக்கை செய்யப்பட்டதுடன், விரைவாக அந்த விடுமுறையை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்க-ப்பட்டிருந்தது.	வெளிநாட்டு விடுமுறையைப் பெற்றுக்கொள் ளும் போது முன் அனுமதி பெறப்படுதல் வேண்டும்.
(ஆ)	**சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கைகள்**			
	2010 யூலை மாதம் 09 ஆம் திகதியிடப்பட்ட இல. CA/1/1/16/1 மற்றும் 1993 திசெம்பர் 31 ஆம் திகதியிடப்பட்ட இல.	திணைக்களத்தின் ஐந்து உத்தியோகத்தர்கள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கவில்லை.	உத்தியோகத்தர்களு க்கு எழுத்துமூலம் அறிவித்து, 2025 மார்ச் **31** ஆம் திகதிக்கு முன்னர் அந்த அறிக்கை-களைத் தேசிய	தொடர்புடைய சுற்றுநிருபத்தி ன் பிரகாரம் உரிய அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்

	பீஏ/6/1/1 சுற்றுநிருபம்		கணக்காய்வு அலுவலகத்திடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை**			
	(i) நி.பி. 104(1) (அ)	நட்டம் அல்லது இழப்பு ஏற்பட்டவுடன் அதன் அளவையும் காரணத்தையும் திட்டவட்டமாக அறிவதற்கும், அதற்குப் பொறுப்பானவர்களைத் தீர்மானிப்பதற்காகவும் ஒரு விசாரணை நடாத்தப்படுதல் வேண்டும். இருந்தபோதிலும், திணைக்களத்திற்குச் சொந்தமான ஆறு மோட்டார் வாகனங்கள் சம்பந்தமாக ஏற்பட்டிருந்த விபத்துக்கள் தொடர்பில் ஆரம்ப விசாரணை கூட நடாத்தப்பட்டிருக்கவில்லை.	தற்போது கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக தேசிய கணக்காய்வு அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கோப்புகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு விசாரணையின் பின்னர், ஒவ்வொரு விபத்து தொடர்பாகவும் ஆரம்ப விசாரணை நடாத்துவதில் தாமதம் ஏற்பட்டதற்கான காரணங்களை வெவ்வேறாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	வாகன விபத்துக்கள் சம்பந்தமாக தொடர்புடைய நிதி பிரமாணங்களின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும்.
	(ii) நி.பி. 104(2)	நட்டத்தின் பெறுமதி ரூபா. 50,000 இற்கு அதிகமாக இருந்தால், அந்த அறிக்கையின் பிரதியொன்று திறைசேரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். இருந்தபோதிலும், திணைக்களத்திற்குச் சொந்தமான 07 வாகனங்கள் சம்பந்தமாக ஏற்பட்டிருந்த விபத்துக்கள் தொடர்பில் நிதி பிரமாணம் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. மேலும், ஏற்பட்ட சேதத்தின் பெறுமதி அல்லது காப்புறுதி நிறுவனத்தினால் செலுத்தப்பட்ட பணம் தொடர்பான தகவல்கள் உரிய கோப்பில் இருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வாகன விபத்துக்களுக்கான காப்புறுதி உரிமைகோரல்கள், சம்பந்தப்பட்ட காப்புறுதி நிறுவனங்களால் முழுமையாகத் தீர்க்கப்பட்டு விட்டன. அதற்கமைய, உரிய கோப்புகளை இற்றைப்படுத்தி, நிதி பிரமாணம் 104/(2) இன் பிரகாரம் அரச நிதிக் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	தொடர்புடைய நிதி பிரமாணக் குறிப்பு பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் அவசியம்.

(iii) நி.பி. 115	கடந்த ஆண்டுகளுக்குரிய கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்காக நிதி பிரமாணம் 115 இன் பிரகாரம் அனுமதி பெறப்பட வேண்டும். இருந்தபோதிலும், திணைக்களத்தினால் விசேட நிபுணர் சேவை வழங்குவதற்காக அறவிடப்படும் கட்டணங்கள் அந்தந்த ஆண்டுகளில் கிடைக்கப்பெற்றவுடன் அரசாங்க வருமானத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தபோதிலும், அதிலிருந்து உத்தியோகத்தர்களுக்குரிய கொடுப்பனவைச் செலுத்தும்போது, கடந்த ஆண்டுகளுக்குரிய பணமும் மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் அனுமதியின்றிச் செலுத்தப்பட்டிருந்தது.	உரிய வருமானம் அறவிடப்படும்போது அரசாங்க வருமானத்தில் வரவு வைக்கப்படும். அத்துடன் உரிய ஆய்வகங்களால் ஒவ்-வொரு உத்தியோகத்தருக்கும் செலுத்தப்பட வேண்டிய கட்டணம் தயாரிக்கப்படுகின்றது. அதன்படி, கோரப்படும் நிதியொதுக்கத்தின் அளவை திறைசேரி வழங்காததால், நீண்ட காலமாகச் சேர்ந்துள்ள செலுத்தப்பட வேண்டிய வருமானங்கள் கிடைக்கப்பெறும் நிதியொதுக்கங்களின் அடிப்படையில் பழைய கொடுப்பனவுகளுக்கு முன்னுரிமை அளித்து உரிய கொடுப்பனவுகளைச் செலுத்துவதாகவும், உண்மையிலேயே உத்தியோகத்தர்களுக்கு தொகுக்கப்பட்ட வருமானமே செலுத்தப்படுவதால், இதுவரை எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்தக் கொடுப்பனவுகளுக்காக நிதி ஒழுங்குவிதி 115 இன் கீழ் அனுமதி பெறப்படவில்லை எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.	தொடர்புடைய நிதி பிரமாணம் பிரகாரம் செயற்படுதல் வேண்டும்.

(ஈ) பொது நிருவாகச் சுற்றறிக்கை

(i) 2016 திசெம்பர் 29 ஆம் திகதியிடப்பட்ட இல.	ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனைக்குப் பின்னரும் 12 மாத காலப்பகுதிக்குப் பின்னரோ என்ஜின் தொடர்பான பிரதான திருத்த	தற்போது திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் பரிசோ-	தொடர்புடைய சுற்றுநிருபத்தின் பிரகாரம் செயற்படுதல்

	30/2016 சுற்றுநிருபத்தின் 3.1 ஆம் பந்தி	வேலைக்குப் பின்னரோ, இவற்றுள் முதலில் ஏற்படும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனை செய்யப்பட வேண்டும். இருந்தபோதிலும், திணைக்களத்தின் 22 வாகனங்கள் சம்பந்தமாக அவ்வாறு செய்யப்படவில்லை.	தனையை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	வேண்டும்.
(ii)	2024 யூன் 07 ஆம் திகதியிடப்பட்ட இல. 14/2022 (IV) ஆம் சுற்றுநிருபத்தின் 2.9 ஆம் பந்தி	அரச உத்தியோகத்தர்களுக்குச் சம்பளமற்ற உள்நாட்டு/வெளிநாட்டு விடுமுறை வழங்கும் போது உரிய விண்ணப்பப் படிவம், விடுமுறை ஆரம்பிக்கும் தினத்திற்கு குறைந்தது மூன்று மாதங்களுக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருந்தபோதிலும், திணைக்களத்தின் இரண்டு உத்தியோகத்தர்களால் விடுமுறை ஆரம்பிப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் விடுமுறைக்கு விண்ணப்பித்திருந்தனர்.	இந்த இரண்டு உத்தியோகத்தர்களும் வீசா கிடைக்கும் எதிர்பார்ப்பில் இருந்தனர். இருப்பினும், வீசா கிடைப்பது நிச்சயமற்றதாக இருந்ததால், வீசா அங்கீகரிக்கப்படும் வரை விடுமுறை விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவில்லை. வீசா கிடைத்த பின்னர் விடுமுறை விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தனர். அதற்கமைய, இரண்டு உத்தியோகத்தர்களினதும் எதிர்கால முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு விரைவாக விடுமுறையை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	தொடர்புடைய சுற்றுநிருபத்தின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும்.
(உ)	**அரச நிதிச் சுற்றறிக்கை**			
	2016 ஆகஸ்ட் 02 ஆம் திகதியிடப்பட்ட இல. PF/R/04/08/01(13) கடிதம்	திணைக்களத்தினால் விசேட நிபுணத்துவ உத்தியோகத்தர்கள் தமது சேவைக்காலத்திற்குப் புறம்பாக நிறைவேற்றும் சேவைகளுக்காகப் பெற்றுக்கொள்ளும் கட்டணத்தை, 03 வருடங்களுக்கு ஒருமுறை மீளாய்வு செய்து உரியவாறு திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். இருந்தபோதிலும்,	கட்டண மீளாய்வுக்கான கோரிக்கை தொடர்புடைய அமைச்சு ஊடாக **2024** திசெம்பர் **06** ஆம் திகதி திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆயினும், அதற்கான அங்கீகாரம் இதுவரை	தொடர்புடைய சுற்றுநிருபத்தின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும்

	திணைக்களத்தினால் **2016** ஆம் ஆண்டில் அங்கீகரி-க்கப்பட்ட கட்டணத் தொகையே மீளாய்வுக்-குட்பட்ட வருடத்திலும் அறவிடப்பட்டிருந்தது.	கிடைக்கப்-பெறவில்லை என அறிவிக்கப்-பட்டிருந்தது.	
(ஊ) ஆதன முகாமைத்துவம் செய்தல் சுற்றறிக்கை			
2017 யூன் 28 ஆம் திகதியிடப்பட்ட இல. 01/2017 சுற்றுநிருபத்தின் 7 ஆம் பந்தி	ஒவ்வொரு நிறுவனமும் கொள்வனவு செய்யும் மற்றும் அகற்றப்படும் சொத்துக்கள் தொடர்பான தகவல்களை உரிய காலாண்டின் முடிவில் கொம்ட்ரோலர் நாயகத்தின் அலுவலகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும். இருந்தபோதிலும், திணைக்களத்தினால் மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் அகற்றப்பட்ட பொருட்கள் தொடர்பான தகவல்கள் கொம்ட்ரோலர் நாயகத்தின் அலுவலகத்திடம் சமர்ப்பிக்கப்படவில்லை.	களஞ்சியப் பிரிவில் உத்தியோகத்தர்கள் இல்லாமையின் காரணமாக காலதாமதத்துடன் பொருட்கள் அகற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அகற்ற-ப்பட்ட சொத்துக்-களின் பெறுமதி **2024** ஆம் ஆண்டில் கணக்கிடப்படாததால், கொம்ட்ரோலர் நாயகத்தின் அலுவல-கத்திடம் சமர்ப்பிக்க-ப்பட்டிருப்பது, கணக்-குகளில் உண்மை-யாக இருந்த தகவல்களே ஆகும் என்று அறிவிக்கப்ப-ட்டிருந்தது	தொடர்புடைய சுற்றுநிருபத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

3.5 வைப்பு மீதிகள்

கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் நிதி ஒதுக்கீட்டு வைப்புகளாக (இல. 11-604) வைப்பிலிடப்பட்ட ரூபா. 58,366,386 வைப்பு பேரேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டிற்குரிய ஒதுக்கீட்டு வைப்புக் கணக்கிற்கு (11-604) ரூபா.58,366,385 ஐ மாற்றுவதற்காக திறைசேரி செயற்பாட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கிடைக்கப்பெற்றது. அதற்கமைய, அந்தப் பெறுமதி 2025 ஆம் ஆண்டின் ஆரம்ப நிலுவையாக வைப்பு பேரேட்டில் பதியப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	சரியான பெறுமதிகளை பேரேடுகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 திட்டமிடல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	2024 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயற் திட்டம், ஆண்டின் போது திருத்தம் செய்யப்பட்ட போதிலும், அதற்காகப் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் ஒப்புதல் பெறப்படவில்லை.	திருத்தப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் அங்கீகாரத்திற்காக அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அங்கீகாரம் இன்னும் கிடைக்கவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது.	திருத்தப்பட்ட திட்டத்திற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	2020 ஓகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 02/2020 ஆன அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 03 இன் வழிகாட்டல் இலக்கம் 12(அ) இன் பிரகாரம், வருடாந்தச் செயற்பாட்டுத் திட்டத்தினுள் உரிய வருடத்திற்குப் புதுப்பிக்கப்பட்ட நிறுவனத்தின் அமைப்பொழுங்கு, அனுமதிக்கப்பட்ட பதவி நிலை மற்றும் தற்போது சேவையில் உள்ள பதவி நிலை பற்றிய விபரங்கள் உள்ளடக்கப்பட-வில்லை.	நிறுவனத்தின் அமைப்பொழுங்கு, அனுமதிக்கப்பட்ட பதவி நிலை மற்றும் தற்போது சேவையில் உள்ள பதவி நிலை பற்றிய தகவல்கள் **2025** ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்துடன் சேர்த்து உள்ளடக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	தொடர்புடைய சுற்றறிக்கையின்படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்
(இ)	திணைக்களத்தால் மீளாய்விற்கான ஆண்டுக்காக நிபுணத்துவ பொடுப்பனவு பெறுகைகளாக ரூபா 20 மில்லியன் மதிப்பிட்டிருந்தது. ஆனால், உண்மையாக ரூபா 34 மில்லியன் பெறப்பட்டிருந்தது. அதன்படி, மதிப்பீடு முறையாகத் தயாரிக்கப்படாமை காரணமாக, உண்மையான பெறுகைகள் 170 சதவீதத்தால் அதிகரித்திருந்தன.	தனியார் தரப்பினரிடமிருந்து பகுப்பாய்வுக்காக திணைக்களத்திற்கு வரும் கோரிக்கைகள் அத்தரப்பினரின் தேவையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதால், அவற்றைச் சரியாக முன்கூட்டியே ஊகிக்க முடியாது என அறிவிக்கப்பட்டிருந்தது.	மதிப்பீடுகளை முறையாகத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்

4.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் (output) அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	மீளாய்விற்கான ஆண்டின் தொடக்கத்தில் திணைக்களத்தின் தடயவியல் விஞ்ஞானப் பிரிவுக்கும் (Forensic Science Division) உணவு விஞ்ஞானப்	சமர்ப்பிக்கப்பட்ட மொத்த வழக்குப் பொருட்களில் கிட்டத்தட்ட **64** சதவீதம் பகுப்பாய்வு ஆண்டின்போது நிறைவு செய்யப்பட்டிருந்தது, அத்துடன்	பதவியணி பிரச்சினைகளை தீர்த்துக்கொண்டு வெளியீட்டு மட்டத்தை

	பிரிவுக்கும் பகுப்பாய்வு அறிக்கைகளை வழங்குவதற்காகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டிய வழக்குப் பொருட்கள் (Case Items) முறையே, 16,237 மற்றும் 1,585 ஆக இருந்தன, அத்துடன் ஆண்டின் போது முறையே 44,172 மற்றும் 20,352 வழக்குப் பொருட்கள் பெறப்பட்டன. இவற்றில், ஆண்டின்போது தடயவியல் விஞ்ஞானப் பிரிவால் 33,446 வழக்குப் பொருட்களும், உணவு விஞ்ஞானப் பிரிவால் 18,680 வழக்குப் பொருட்களும் பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்-பட்டிருந்தன. இதன்படி, ஆண்டின் முடிவில் தடயவியல் விஞ்ஞானப் பிரிவிற்கும் உணவு விஞ்ஞானப் பிரிவிற்கும் முறையே 26,963 மற்றும் 3,257 வழக்குப் பொருட்கள், அதாவது 45 சதவீதம் மற்றும் 15 சதவீதம் பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதற்கு மீதமிருந்தன.	திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட பதவி நிலைகளில் மூன்றில் ஒரு பங்கிற்கு அண்மித்த பதவிகள் இவ்வளவு எண்ணிக்கையிலான பதவிகள் வெற்றிடமாக உள்ளதாலும், இத்தகைய நிலைமையின் கீழ் செயற்றிறனை அதிகரித்துக் கொள்வதற்கு பணியாற்றுதல், நடைமுறையில் சாத்தியமற்றதாலும் பதவியணி வெற்றிடங்களை பூர்த்தி செய்தால் உயர் செயலாற்றுகையை அடைந்துக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.	அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 30,220 வழக்குப் பொருட்களில் 4,028 வழக்குப் பொருட்கள், அதாவது 13 சதவீதம் 2017-2023 காலப்பகுதிக்கு உரியவையாக இருந்தன.	போதுமான அளவில் வழக்குப் பொருட்கள் சமர்ப்பிக்கப்படாமை மற்றும் பகுப்பாய்விற்காகப் புதிய பகுப்பாய்வு முறைகளைத் தயாரிக்க நேர்ந்தமை என்பவற்றால், எஞ்சியுள்ள வழக்குப் பொருட்களைச் சாத்தியமான விரைவில் பகுப்பாய்வு செய்து உரிய அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு ஆய்வுகூடங்களின் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	பழைய வழக்குகளின் எண்ணிக்கையை விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(இ)	திருத்தப்பட்ட செயற் திட்டத்தின்படி வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா. 2,000,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது ரூபா. 1,052,139 மட்டுமே செலவிடப்பட்டிருந்தது, அதன்படி மதிப்பிடப்பட்ட தொகையில் 47 சதவீதம் மீதமாகியிருந்தது.	2024 ஆம் ஆண்டிற்காக வீட்டு தளபாடங்கள் (Furniture) மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவிற்காக ரூபா. 1,843,578 செலவிடப்பட்டுள்ளதுடன், அதற்கமைய சேமிப்புச் சதவீதம் 7 சதவீதம் என அறிவிக்கப்பட்டிருந்தது.	மதிப்பீடுகளை முறையாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஈ)	கட்டிடங்கள் மற்றும் கட்டுமானங்களுக்காக ரூபா. 100,000,000 மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டின்போது இதில் ரூபா. 42,836,328 மட்டுமே செலவிடப்பட்டிருந்தது, அதன்படி 57 சதவீதம் தொகை மீதமாகியிருந்தது.	KOICA செயற்றிட்டத்துடன் தொடர்புடைய நச்சுயியல் ஆய்வுகூடத்தையும் (Toxicology Laboratory) போதைப்பொருள் ஆய்வுகூடத்தையும் நவீனமயமாக்குவதற்காக இந்த நிதி ஒதுக்கீடு கோரப்பட்டது, ஆனாலும், வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்படும்போது அந்த கட்டுமானத்துடன் தொடர்புடைய ஒரு மொத்த மதிப்பீடு கூடத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்படாததால், இவ்வாறு செலவு முன்கணிப்புச் செய்யப்பட்டு நிதி ஒதுக்கீடு கோரப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	மதிப்பீடுகளை முறையாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2018 திசெம்பர் 31 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 04/2018 ஆன சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கை, நிதி சாராச் சொத்துக்களின் மீள்மதிப்பீட்டு வழிகாட்டலின் 2.3, 3.3.1 மற்றும் 4.3 பந்திகளின் பிரகாரம், ஒவ்வொரு 05 வருடங்களுக்கும் ஒரு முறை காணி மற்றும் கட்டிடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள், அத்துடன் பொறிகள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்காக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களம் அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	**2024** ஆம் ஆண்டில் காணி மற்றும் கட்டிடங்களின் மீள்மதிப்பீட்டிற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும், முதற் கட்ட மீள்மதிப்பீடுகள் நிறைவடையும் வரை இரண்டாம் கட்டக் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டாம் என்று அரச கணக்குகள் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன், இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் மீள்மதிப்பீட்டிற்காக 2024 ஆம் ஆண்டில் 2 குழுக்கள் நியமிக்கப்பட்ட போதிலும், இன்று வரை அந்த மீள்மதிப்பீடு நிறைவடையவில்லை எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.	தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

4.4 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல் தொடர்பாக, 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 01/2020 இன் அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி II, பந்தி 9 ஆல் திருத்தப்பட்ட நிதி ஒழுங்குவிதி 880 இன்படி, அரசாங்க நிதி போன்றவற்றின் பொறுப்பாளர் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பொறுப்பு கணக்கீட்டு உத்தியோகத்தரிடமே இருப்பதால், உரிய உத்தியோகத்தர்கள் பிணை வைப்பதை உறுதி செய்ய வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிதி ஒழுங்குவிதி 315 இல் பிணை வைப்புச் செய்ய வேண்டிய கணக்காளர், காசாளர் (Cashier), மற்றும் களஞ்சியப் பொறுப்பாளர் போன்ற பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள் உரிய பிணைத் தொகையை வைப்பிலிடவில்லை.	அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு கட்டளைச் சட்டம் (Security Deposit Ordinance) திருத்தம் செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், எதிர்காலத்தில் அந்தச் சட்டத்திற்கு அமைய செயற்படுவதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

4.5 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2003 பெப்ரவரி 14 ஆம் திகதி ஏற்பட்ட தீ விபத்து நட்டங்கள் ரூபா. 2,229,111 என்று சேதங்கள் மற்றும் கைவிடல்கள் தொடர்பான அறிக்கையில் (Statement of Losses and Write-offs) காட்டப்பட்டிருந்த போதிலும், அதை புத்தகங்களில் இருந்து நீக்குவதற்கு மீளாய்விற்கான ஆண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதில் வழங்கப்படவில்லை.	உரிய பெறுமதிகளை நிதி அறிக்கைகளில் (Financial Statements) உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்

4.6 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன..

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	திணைக்களத்திற்குச் சொந்தமான 7 மோட்டார் வாகனங்களின் விபத்துகள் தொடர்பான திருத்த வேலைகளைக் காப்புறுதி ஆவணத்தின் கீழ் மேற்கொள்வதற்காக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், இந்தத் திருத்தங்கள் உண்மையாகச் செய்யப்பட்டனவா, காப்புறுதி நிறுவனத்தால் உரிய முழுப் பெறுமதியும் செலுத்தப்பட்டதா அல்லது விபத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் இருந்து ஏதேனும் பணம் அறவிடப்பட வேண்டுமா இல்லையா என்பது தொடர்பான எந்தத் தகவலும் வாகன விபத்துக் கோவைகளுக்குள் உள்ளடக்கப்படவில்லை.	இது தொடர்பாக உரிய குழு அறிக்கைகளைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறு கிடைக்கப்பெறும் அறிக்கைகளின்படி எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.	உரிய தகவல்களைக் கோப்புகளில் (Files) உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
(ஆ)	2022 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா. 85,861 அனர்த்தக் கடன் மிகுதி, 10 வருடங்களுக்கும் மேலாகச் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா. 18,754 அனர்த்தக் கடன் மிகுதி, மற்றும் ஒரு உத்தியோக-த்தரிடமிருந்து **3** வருடங்களுக்கும் மேலாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா. 2,400 விசேட முற்பணக் கடன் மிகுதி, அத்துடன் 2023 யூலை மாதம் 06 ஆம் திகதி முதல் சேவையிலிருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. **222,950** அனர்த்தக் கடன் மிகுதி மற்றும் **7,500** ரூபா பண்டிகை முற்பணத் தொகை என்பன மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை	இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மிகுதி 2025 ஏப்ரல் மாதம் வரை சம்பளத்திலிருந்து தவணைகளாகக் கழிக்கப்பட்டதுடன், 2025 மே மாதத்தில் அனர்த்தக் கடன் வரம்பு ரூபா. 400,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளதால், 2025 மே மாதத்தில் முழுமையான கடன் மிகுதியையும் Journal (பதிவேடு) மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், ஏனைய சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் சேவையிலிருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மிகுதியைத் தீர்க்குமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.	அறவிடப்பட வேண்டிய கடன் மிகுதியை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(இ)	**2016** ஆம் ஆண்டில் KOICA மானியமாகத் திணைக்களத்திற்குக் கிடைத்திருந்த IBM Storwize V**3700** வகை உபகரணத்தில், 2017 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை டிஜிட்டல் குற்றவியல் பகுப்பாய்வு ஆய்வு-கூடத்தால் வழங்கப்பட்ட பரிசோதனை அறிக்கைகள் தொடர்பான தரவுகள் சேமிக்கப்பட்டிருந்தன. இந்த உபகரணம் மீளாய்விற்கான ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் செயலிழந்ததுடன், இதன் காரணமாக இந்த Storage Server உபகரணத்தில் சேமிக்கப்பட்டிருந்த தரவுகளை மீண்டும் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை எழுந்ததுடன், அந்த உபகரணத்தை ஆண்டினுள் மீண்டும் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த உபகரணம் 2024 ஆம் ஆண்டில் செயலிழந்ததுடன், அதனைத் திருத்தம் செய்ய முடியாது என முகவர் நிறுவனம் அறிவித்தது. இதற்காகப் போட்டி விலைமனு கோரல் மூலம் விலைமனுக்கள் கோரப்பட்ட போதிலும், ஒரு நிறுவனம் மட்டுமே அந்த இயந்திரத்தை இயக்கக்கூடிய நிலைக்குக் கொண்டுவர முடியுமா என்பதைக் கருத்தில் கொள்வதற்கு தேவையான உபகரணம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்குரிய விலைமனுக்களைச் சமர்ப்பித்ததுடன், அந்த நிறுவனம் தற்போது உரிய திருத்தவேலையின் ஆரம்ப நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	உபகரணத்தைத் திருத்தம் செய்து, தரவுகளை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திணைக்களத்துடன் தொடர்புடைய நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அதற்கான இலக்குகள் அடையாளம் காணப்பட்டிருந்த போதிலும், அந்த இலக்குகளை அடைவதற்காக சுட்டிகள் தயாரிக்கப்பட்டிருந்தன. அங்கே, நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக திணைக்களத்தினால் அடையாளம் காணப்பட்ட இலக்கான ”சமாதானம், நீதி மற்றும் பலமான நிறுவனங்களை உருவாக்குதல்” என்ற பணியில், நேரடியாகப் பங்களிக்கும் இலக்காக அமைந்த அமைதியான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தை மேம்படுத்துதல் என்ற செயற்பாட்டுடன் தொடர்புடைய முக்கியமான பணியாக, நிறுவனம் நிறைவேற்றும் பகுப்பாய்வுக்காக கிடைக்கப்பெற்றுள்ள வழக்குப்	அபிவிருத்தி இலக்குகள் அனைத்தும் தற்போது சேவையில் உள்ள பதவியணி தொகுதியால் அடையக்கூடியவாறு தயாரிக்கப்பட்டிருந்தன என்றும், அதன்படி எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடையப்பட்டுள்ளன என்றும், இருப்பினும் பதவியணி தொகுதியில் அதிக எண்ணிக்கையிலான பதவிகள் வெற்றிடமாக இருந்தமை, போதுமான அளவில் வழக்குப் பொருட்கள் சமர்ப்பிக்கப்படாமை மற்றும் பகுப்பாய்வுக்காகப் புதிய பகுப்பாய்வு முறைகளைத் தயாரிக்க நேர்ந்தமை என்பவற்றால், அபிவிருத்தி இலக்குகளை உயர்ந்த பெறுமதிக்குள் நிலைநிறுத்த முடியவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.	நிலையான அபிவிருத்தி இலக்குகளை நோக்கிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

பொருட்கள் மற்றும் மாதிரிகளின் பரிசோதனை மூலம் அறிக்கைகளை வெளியிடும் செயன்முறையை இலக்கு வைத்துச் செயற்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்விற்கான ஆண்டில் அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டிய 30,220 வழக்குப் பொருட்களில் 4,028 வழக்குப் பொருட்கள், அதாவது 13 சதவீதம் 2017-2023 காலப்பகுதிக்கு உரியவையாக இருந்தன என அவதானிக்கப்பட்டது.

6. நல்லாளுகை

6.1 பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திணைக்களம் தொடர்பான தகவல்களை வெளித் தரப்பினர் பெற்றுக்கொள்வதற்காக இணையதளம் (Website) ஒன்று உருவாக்கப்பட்டிருந்த போதிலும், அது மீளாய்விற்கான ஆணடில் இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை**.**	திணைக்களத்தால் இணையதளம் ஒன்றை உருவாக்குவது தொடர்பான கொள்வனவு நடவடிக்கைகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், 2025 யூன் மாதம் முதல் இணையதளம் மீண்டும் செயற்பாட்டு நிலைக்கு கொண்டுவர முடியும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.	இணையதளத்தை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

6.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(i) பிரிவின் பிரகாரம், திணைக்களத்தால் உள்ளக கணக்காய்வ பிரிவு (Internal Audit Unit) ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை.	உள்ளக கணக்காய்வாளர் பதவி ஒன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், பல வருடங்களாக உரிய பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவர் இந்தத் திணைக்களத்திற்கு இணைக்கப்படவில்லை என்றும், உரிய வெற்றிடங்களை நிரப்புமாறு பொது நிர்வாக அமைச்சுக்கு (Ministry of Public Administration) அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	கணக்காய்வு சட்டத்திற்கிணங்க (Audit Act) நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

7. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது

கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
நிறுவனத்தின் பணிகளைத் திறமையாக மேற்கொள்வதற்கு உதவக்கூடிய தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவையான சிரேஷ்ட மட்டத்திலுள்ள 33 உத்தியோகத்தர்களினதும், மூன்றாம் நிலை மட்டத்திலுள்ள 6 உத்தியோகத்தர்களினதும் பதவிகள் வெற்றிடமாக உள்ளதன் காரணமாக, திணைக்களத்தின் பிரதான இலக்கான வழக்குப் பொருட்களைப் பகுப்பாய்வு செய்ததன் பின்னர், வெளியிடப்படும் விஞ்ஞான அறிக்கைகள் மூன்று மாத காலத்திற்குள் வழங்குவதற்கு தடையாக இருந்தது.	சிரேஷ்ட மட்டத்திலுள்ள 33 வெற்றிடங்கள், கணக்காளர் மற்றும் தட்டெழுத்தாளர் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கு பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் பொதுச் சேவையின் ஆட்சேர்ப்புச் செயன்முறையை மீளாய்வு செய்யும் குழு ஆகியவற்றுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இரசாயனவியல் ஆய்வுக்கூடத் தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர் பதவிக்காக 2025 மே 17 ஆம் திகதி பரீட்சை நடாத்தி, முடிவுகள் கிடைத்த பின்னர் ஆட்சேர்ப்புச் செய்வதற்கும், இரசாயனவியல் ஆய்வுக்கூடத் தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர் விசேட தரத்தில் அங்கீகரிக்கப்பட்ட 05 பதவிகளை நிரப்புவதற்காக தற்போது சேவையில் உள்ள எந்தவொரு இரசாயனவியல் ஆய்வுக்கூடத் தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தரும் தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்றும், ஆரம்ப மட்டத்திலுள்ள வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு பொதுச் சேவையின் ஆட்சேர்ப்புச் செயன்முறையை மீளாய்வு செய்யும் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் பிரதான பணிகளைப் பயனுள்ள வகையில் நிறைவேற்றுவதற்காக, பதவிகளுக்குரிய பணியாளர் தொகுதியை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.